# அரசியல் திட்டம்

1984 ஜூன் 28இல் நடைபெற்ற
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்
முதலாவது காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்டது.

வெளியீடு : பிரச்சார செய்திப் பிரிவு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# அறிமுகம்

**புவி-குடித்தொகைப் பின்னணியும்**
**வரலாற்றுப் பின்னணியும்**

இன்று சிறீலங்கா என்று அழைக்கப்படும் இலங்கைத் தீவானது, இந்திய உபகண்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ளது. இலங்கைத்தீவினை ஆகக்குறைந்தது 22 மைல்களுடைய பாக்சலசந்தி இந்தியாவிலிருந்து பிரிக்கிறது. 25,332 சதுர மைல்கள் (65,627 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவு கொண்ட இத்தீவினுடைய மொத்த சனத்தொகை கிட்டத்தட்ட 150லட்சம் ஆகும். பல தேசிய இனங்களைக் கொண்ட இலங்கைத் தீவில், அவற்றிற்கே உரிய தனித்துவமான பாரம்பரியம், மொழி, தொடர்ச்சியான வாழ்விடம் மற்றும் சமூகப் பொருளாதார அரசியல் வரலாற்றுப் பின்னணிகளுடன் கூடிய ஒடுக்குகின்ற சிங்கள தேசமும், ஒடுக்கப்படுகின்ற தமிழ்தேசமும் காணப்படுகின்றன. இங்கு பிரதானமாக சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் வாழ்கின்றன. இவற்றுள் தனித்துவமான வரலாற்று அம்சங்களைக் கொண்ட மலையகத் தமிழர்களும், தமிழ்பேசும் முஸ்லீம்களும் வாழ்கிறார்கள்.

தீவினுடைய மொத்த சனத்தொகையில் 74% சிங்களவரும் 25.3% தமிழ் பேசும் மக்களும் காணப்படுகின்றனர். ஏனையோர் மலாயரும், பறங்கியரும் ஆவர். சிங்களவரும் தமிழரும் 2000க்கு மேற்பட்ட ஆண்டு காலமாக இத்தீவில் ஒன்றாக வாழ்ந்து வருவதை இலங்கைத் தீவின் குடியமர்வு வரலாறு கூறுகிறது. இதைவிட தமிழ் பேசும் முஸ்லீம்களையும், மலையகத் தமிழர்களையும் பொறுத்தவரையில் காலனித்துவ காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே தமிழ்பேசும் முஸ்லீம்கள், ஒரு இன-மத சமூகமாக தோற்றம் பெற்றனர். மலையகத் தமிழர், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டனர்.

1505இல் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது, ஒருபுறத்தில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச்சிற்றரசும் மறுபுறம் கோட்டை, கண்டி இராச்சியங்களும் இங்கு காணப்பட்டன. அவ்வப்போது தம்மிடையே மோதிக் கொண்ட போதிலும் முன்னையவை தமிழ்ப் பிரதேசங் களையும், பின்னையவை சிங்களப் பிரதேசங்களையும் ஆட்சி புரிந்தன. கடலோரப் பிரதேசங்களை ஆட்சி புரிந்த காலனித்துவ ஆட்சியாளர்களாகிய போத்துக் கேயரும், அவர்களைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரரும் தமிழ், சிங்கள பிரதேசங்களைத் தனித்தனியாகவே நிர் வகித்துச் சுரண்டலை மேற்கொண்டனர்.

பிரித்தானிய காலனித்துவம் 1796இல் இலங்கைக்கு வந்தமை, 1815இல் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டமையுடன் இலங்கை முழு வதும் ஒரே நீதி-அரசியல்-நிர்வாக அமைப்புக்குள் ஒன்று படுத்தப்படும் செயல்முறையும், ஒரு காலனித்துவ நாடு ஏற்படுத்தப்படுதலும் ஆரம்பிக்கப்படுகின்றன. 1833 அளவில் இரண்டு தேசங்களையும் ஒரே காலனித்துவ நாடாக ஒன்றுபடுத்தும் செயல்முறை முற்றுப்பெற்றது.

பிரித்தானிய குடியேற்ற ஆட்சிக் காலத்தில், தென் னிந்தியாவிலிருந்து உடைமைகள் பறிக்கப்பட்டும் வறு மைப் படுத்தப்பட்டுமிருந்த தமிழர்களிலிருந்து வந்த ஒப் பந்தத்தொழிலாளரை அடிப்படையாகக்கொண்டு "பெருந் தோட்டப் பொருளாதாரம்" ஒரு தனித்துவமான உற்பத்தி முறையாகத் தோற்றம் பெற்றது. இனரீதியாக "மலை யகத் தமிழர்" என்றும், வர்க்கரீதியாகப் "பெருந்தோட்டப் பாட்டாளிகள்" என்றும் அறியப்படும் இவர்கள், தீவின் மொத்த தமிழர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க பகுதி யினராவர்.

தமிழர்களுடன் மொழி மற்றும் வாழும் நிலப்பரப்பு பொறுத்து நெருங்கிய தொடர்புகொண்டுள்ள முஸ் லீம்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் குறிப்பிடத் தக்க இன்னொரு பகுதியினராவர். காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து மேற்கு ஆசியாவிலிருந்தும், இங்

த... லிருந்தும் குடியேறியவர்களின் வழித்தோன்றல். களாகிய முஸ்லீம்கள் தமிழ்மொழியைப் பேசுகின்றனர்.

**ஈழமக்களும் அவர்கள் வாழும் பிரதேசங்களும்**

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை யும், மத்திய மலையகத்திலுள்ள ஒரு பகுதியினையும் உள்ளடக்கியதே ஈழமக்கள் வாழும் பிரதேசங்களாகும். வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகும். மலையகத் தமிழர்கள் குடி யேறி அபிவிருத்தி செய்த மலையகப்பகுதிகள் ஈழப் பிரதேசத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும்.

**ஈழத்தின் சமூக உருவாக்கம் பற்றிய ஒரு மேல்நோக்கு**

அளவு ரீதியாக சமமற்றதாக இருந்தபோதும் ஈழத் தின் சமூக உருவாக்கத்தில் முதலாளித்துவ உறவுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஊடுருவியுள்ளதைக் கண்டு கொள்ளலாம். சாதிப்படிநிலை அடுக்கின் ஆகக்கீழே இடம்பெறும் நிலமற்ற விவசாயத் தொழிலாளரைப் பொறுத்தவரை சாதிக்கும், வர்க்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவது, ஈழத்தின் சமூக உருவாக்கத்தின் ஒரு பிரத்தியேகத் தனமையாகும். மாறாக, நிலவுடைமையாளர்கள் பெரும்பாலும் ''உயர் சாதி''யைச் சேர்ந்தவர்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட நிலைமை குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப் படுகிறது.

விவசாயத்தைப் பொறுத்தவரை உடைமை - பயிர்த் தொழில் பரவலாக இருக்கிறது. இதைவிட முதலாளித் துவத்திற்கு முன்னைய முறையான விளைபயிரில் நில வுடைமையாளனுக்குப் பங்கு கொடுக்கும் நிலை அருகிவரு வதுடன், இதற்குப் பதிலாக முதலாளித்துவ முறையான பணவாடகை (குத்தகை) முறைமை வழக்கத்திற்கு வந் துள்ளது. விவசாய கூலி உழைப்பாளர்கள் பிரதானமாக நாளாந்த அடிப்படையில் வேலை செய்பவர்களாக இருக்

கின்றனர். பரவலாகவும் அதிகரித்தும் வருகின்ற முதலாளித்துவக் கூலி உழைப்பு முறைமையுடன் சேர்ந்து இது காணப்படுகிறது.

மீன்பிடித் துறையில் கூலியுழைப்பையும் மற்றும் சுதந்திரமான சிறிய படகு மீனவரையும் அடிப்படையாகக் கொண்ட கரையோர மீன்பிடித்தொழில் பெருமளவிற்கு நடைபெற்று வருகிறது. பெருந்தோட்ட உற்பத்தியில் கூலியுழைப்பு ஆதிக்கம் செலுத்துகிறது. எழுத-வாசிக்கத் தெரியாமை, போஷாக்குக் குறைவு, சமூக வசதிகள் போதாமை, மோசமான வாழும் நிலைமையைக் கொண்டுள்ள பெருந்தோட்டப் பாட்டாளிகள் இலங்கையில் மிகவும் மோசமாக சமூக ரீதியாக ஒடுக்கப்படும் பகுதியினராவர் அத்துடன் மலையகத் தமிழருடைய குடியுரிமையும், வாக்குரிமையும் சிறீலங்கா அரசினால் பறிக்கப்பட்டுள்ளன.

வியாபாரம், வர்த்தகம் என்பவை வளர்ச்சியடைந்து வாணிப முதலாளித்துவம் ஈழப் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் முதன்மையாக இருக்கின்றது. ஆனால் தற்சார்பு வலுவாதாரத்தின் அடிப்படையில் ஈழப் பொருளாதாரத்தைக் கைத்தொழில் மயமாக்கவும் அபிவிருத்தி செய்யவும் கூடிய ஆற்றலை வாணிப மூலதனம் பெற்றிருக்கவில்லை. கடந்த காலத்தில் பெருமளவு சிறிய கைத்தொழில் அலகுகள் ஆரம்பிக்கப் பட்டபோதும், மூலதனத் திரட்சிக்கும் மறு முதலீட்டுக்கும் பதிலாக வியாபார லாபமும், நுகர்வுமே பிரதான நோக்கமாக இருந்தன.

புதிதாக வளர்ச்சிபெறும் தேசிய முதலாளிகளையும் வியாபாரிகள, சிறுபண்ட உற்பத்தியாளர் மற்றும் பணக்கார புல்லுருவிகளான அதிகாரத்துவ அடுக்கினரையும் உள்ளடக்கிய பெருமளவு குட்டி முதலாளிகளையும் ஈழத்தின் வர்க்க உருவாக்கம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**எவ்வாறாயினும் வறிய விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மலையகப் பாட்டாளிகள், கடல் தொழிலாளர்கள், நகர எழுதுவினைஞர்கள், உடலுழைப்பாளர்கள், உதிரிப் பாட்டாளிகள் ஆகியோரை**

அடக்கிய உழைக்கும் வெகு ஜனங்களே ஈழ மக்க ளின் பெரும்பகுதியினராவர்.

ஈழத்தின் புத்திஜீவிகள் பெரும்பாலும் வெளிநாடு களில் வாழ்கிறார்கள். இவர்களும் ஈழத்தில் தங்கியிருக்கும் புத்திஜீவிகளும் விலைமதிப்பற்ற மனித சக்தியையும் மனித வளங்களையும் தம்மகத்தே அடக்கியிருக்கிறார் கள்.

மேலும் சிறீலங்கா அரசானது முதலீடுகளை ஈழத் தில் மேற்கொள்ளாமையும், ஈழத்தின் மிகையானது அர சுக்குச் சொந்தமான வங்கிகள் மூலம் தீவின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டமையும் திட்டமிட்ட முறையில் நடைபெற்று வந்தமையால் ஈழப்பொருளாதாரம் பின் தங்கிய நிலையை அடைந்தது.

**ஈழமக்களின் விடுதலை இயக்கத்தின் தோற்றம்**

சிங்கள-தமிழ் முதலாளிகள் பிரித்தானிய ஆட்சிக் கெதிராக நடத்திய சுதந்திரப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கத்தையோ வெகுஜன அடித்தளத் தையோ கொண்டிருக்கவில்லை. மாறாக அரசியல்யாப்புச் சீர்திருத்தத்திலும், சட்டமன்றப் பிரதிநிதித்துவத்திலுமே அவர்களது எதிர்ப்பின் பிரதான கவனம் இருந்தது. இன, மத, சாதி, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு முத லாளித்துவ தேசிய இயக்கம் வலுப்பெறாமையினால் சட்டமன்றப்பிரதிநிதித்துவம், அவற்றின் மீதான கட்டுப் பாடு இவற்றுடன் திருப்தியுறும் அரசியல் தரகர்களுடைய பங்கினையே சிங்கள-தமிழ் முதலாளிகளினால் வகிக்க முடிந்தது. மேலும், தமிழ், சிங்கள முதலாளித்துவ வர்க் கத்தின் உடன்பிறந்த பலவீனம் காரணமாக முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் தேசங்களின் சமத்துவம், சுதந்திரமான ஒப் பேறு வாய்ப்பான தேசியப் பொருளாதாரம் ஆகியவற் றினை அடிப்படையாகக் கொண்ட தேசிய அரசைக் கட்டும் வேலை நிறைவேற்றப்படவில்லை.

பிரித்தானிய காலனித்துவ நிலைமையின் கீழ்
வான முதலாளித்துவத்தின் தரகுக் குணாம்சமானது, சகல முதலாளிகளுக்கும் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தூரப் பார்வை இல்லாமை என்பதில் பிரதிபலித்தது. சிங்கள முதலாளித்துவ வர்க்கமும், அவர்களது அரசியல் பிரதிநிதிகளும் சிறீலங்கா தேசிய வாதத்தை சிங்கள நாடு, சிங்கள இனம், பௌத்த மதம் (றட்டே, ஜாதிய, ஆகம) ஆகியவற்றுடன் சமப்படுத்திய போது, தமிழ் முதலாளித்துவ வர்க்கமும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளும் சிறுபான்மையினருக்கு அரசியல் யாப்புப் பாதுகாப்புகளைக் கோருவதில் கவனஞ் செலுத்தினர். சுதந்திரத்திற்குப் பிற்பட்ட சிறீலங்கா முதலாளித்துவ அரசில் சிங்கள முதலாளிகளுடன் தாம் பங்குதாரராக ஆகலாம் என்ற நம்பிக்கையில் தமிழ் முதலாளித்துவ வர்க்கம் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டது. இச்செயல்பாட்டில் தமிழ் முதலாளித்துவ வர்க்கமும், தமது குறுகிய வர்க்க நலன்களுக்குப் பரந்துபட்ட தமிழ் மக்களின் நலன்களைக் கீழ்ப்படுத்தியது.

சுதந்திரம் கிடைத்த உடனேயே மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டுத் தமிழ்த் தேசம் மீதான ஒடுக்குமுறை ஏற்பட்டது. மலையக மக்களின் இப்பிரச்சினை தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை ஆழமாகவும் அகலமாகவும் அதிகரித்துச் செல்வது பற்றித் தமிழ்பேசும் மக்களிடையே அதிகரித்து வரும் உணர்வினைத் தமிழ்க் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு பிரதிபலித்தது.

''சிங்களம் மட்டும் சட்டம்'', அரச உதவியுடன் தமிழ் மக்களின் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்டு வரும் சிங்களக் குடியேற்றம், இவற்றிற்கெதிராகத் தமிழரசுக் கட்சி 1956இல் நடத்திய அமைதிவழிப் போராட்டம், தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தின் வளர்ச்சியையும், திசையையும் தீர்மானித்த இரண்டாவது

...மசரீதியான மாற்றம் ஆகும். இந்தக் கிளர்ச்சிகளுக்கு எதிராக இனவெறி பிடித்த சிங்கள பௌத்த, மற்றும் அரசியல் நிறுவனங்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டன. அதன் பின்னர் தமிழ் மக்களைப் பயங்கரவாதத்திற்கு உட்படுத்தி பணிய வைக்கும் ஒரு கருவியாக, தமிழ்பேசும் மக்களுக்கெதிரான படுகொலைகளை இனவெறி பிடித்த சிங்கள பௌத்த இயக்கங்களின் துணையுடன் சிறீலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது.

1956இல் திருமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு முற்றுப்புள்ளி, மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை வாக்குரிமையைப் பறிக்கின்ற சட்டங்களைத் திருப்பிப் பெறல், சிங்கள மொழியுடன் தமிழுக்கும் சம அந்தஸ்து ஆகியவற்றிற்கான கோரிக்கை வைக்கப்பட்டதுடன், சமஷ்டி முறையான அரசாங்கம் ஒன்றினையும் ஏற்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

இத்தீர்மானங்களுடன் சென்று S.W.R.D. பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழரசுக் கட்சி ஸ்தாபகர்களுள் ஒருவரான S.J.V. செல்வநாயகம் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். 1957இல் செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமானது சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கோரிக்கை என்பதைத் தவிர தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்டது. ஆனால் இவ்வொப்பந்தம், சிங்கள பௌத்த இனவெறி இயக்கங்களினதும் பாராளுமன்றக் கட்சிகளினதும் எதிர்ப்பு காரணமாக பண்டாரநாயக்காவினால் ஒருதலைப் பட்சமாகக் கிழித்தெறியப்பட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கான எதிர்ப்பு அலையை முன்னின்று நடத்தியவர் இன்றைய சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகும். ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது மாத்திரமின்றி 1958இல் தமிழ் மக்களுக்கு எதிராகப் படுகொலைகள் நடைபெற்றபோது பெருமளவு உயிர் உடைமைகளைத் தமிழ் மக்கள் இழந்தனர்.

அகிம்சைப் போராட்டத்தின் உச்சக்கட்டம் 1961இல் 'சிங்களம் மட்டும் சட்டத்'திற்கு எதிராக நடைபெற்ற சத்தியாக் கிரகமாகும். தமிழரசுக் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட இச் சத்தியாக்கிரகம், தமிழ்பேசும் மக்களின் பரவலான ஆதரவைப் பெற்று அரச யந்திரத்தைத் தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்தம்பிக்கச் செய்வதில் வெற்றி கண்ட போதும், இறுதியில் ஆயுதப்படைகள் தமிழ்ப் பிர தேசங்களுக்குக் கொண்டுவரப்பட்டு ஒடுக்கப்பட்டது. 1961இல் சத்தியாக்கிரகம் தோற்கடிக்கப்பட்டதுடன் தமிழரசுக் கட்சி சந்தர்ப்பவாத ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள ஆரம்பித்தது. அமுல்படுத்தப்படாத இவ் வொப்பந்தங்களினால் தமிழ் மக்களுக்கு எதுவித நன் மையும் கிடைக்கவில்லை.

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பாராளு மன்றம், தேர்தல்கள், இவற்றினை அடிப்படையாகக் கொண்ட பழைய போராட்ட வடிவங்கள் தோல்வியுற்றன. 1970 களின் ஆரம்பமளவில் தமிழ் மக்களுக்கு குறிப்பாக வாலிபர்களுக்கு இது தெளிவாயிற்று. சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1970களில் இனரீதியான பல்கலை கழக அனுமதி முறையைக் கடைபிடித்த போது, தமிழ் இளைஞர் களிடையே ஏற்கனவே இருந்த உணர்வுகள் இன உணர் வின் அடிப்படையிலான போராட்ட உணர்வாக வெளிப் பட்டது. ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின உரிமை களுக்காக் அரசியல் இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற ரீதியில் இளைஞர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் சாதாரண மக்கள் மீது சிறீ லங்கா ஆயுதப் படையினர் வன்முறைகளைக் கட்ட விழ்த்து விட்டது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்தக் கட்டத்திலிருந்து ஆயுதமேந்தியே எதிர்ப்பைத் தெரிவிப்பது என்பது நடைமுறைக்கு வந்தது. மேலும் ஆயுதப் போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்கென்ற தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன்

தொடங்கியது. ஈழமென்று அழைக்கப்படும் தனி நாட்டிற்கான கோரிக்கை பரந்து பட்ட தமிழ்பேசும் மக்களுடைய ஆதரவைப் பெற்றது. தமிழ் மொழியின் உரிமை மறுக்கப்பட்டமை, தமிழ் மக்களின் நிலங்கள் திட்டமிட்ட குடியேற்றங்களினால் பறிக்கப்பட்டமை, கல்வி வேலை வாய்ப்பு அரச முதலீடு என்பவற்றில் காணப்பட்ட பாகுபாடு, தமிழ் பேசும் மக்கள் மீதான அரச பயங்கரவாதம், படுகொலைகள் போன்றவை ஈழக் கோரிக்கைக்கு மேலும் வலுவூட்டின.

1974 பிற்பகுதி அளவிலும் 1975 முற்பகுதி அளவிலும் ஈழப் போராட்டம் ஒரு **வெகுஜன இயக்கமாக** மாறத் தொடங்கியது. ஈழக் கோரிக்கைக்கான ஒரு கருத்துக்கணிப்பு வாக்களிப்பு என்று கூறி 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டபோது, தமிழ் பேசும் மக்கள் அவர்களுக்கு மகத்தான வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர். ஈழத்திற்கான கட்டளையை மறந்து சிங்கள ஆளும் கும்பலுடன் கூட்டணி சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தபோது, கூட்டணி முதலாளித்துவ தலைமையின் சீர்திருத்தத்தன்மை வெளிப்பட்டது.

பாரம்பரிய இடதுசாரிகள் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகவும், தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் போராடத் தவறியது ஈழமக்கள் ஈழக்கோரிக்கையில் உறுதியாக நின்றமைக்கும், அவர்களது போர்க்குணத்துக்குமான இன்னொரு காரணியாகும். ஆரம்பத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், சம சமாஜ கட்சியும் சிறீலங்கா சுதந்திர கட்சியுடன் ஐக்கிய முன்னணி அமைத்துத் தேர்தல் தந்திரோபாய பாதையைக் கடைபிடித்த போது தமிழ்பேசும் மக்கள் தொடர்பாக அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாடுகளைப் படிப்படியாகக் கைவிட்டனர். பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற, தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து என்றிருந்த தமது முன்னைய நிலைப்பாட்டைக் கைவிட்டுச் சிங்களம் மட்டும் உத்தியோக

மொழி என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்த...
இதனால் பாரம்பரிய இடதுசாரி கட்சிகள் தமிழ் பேசும் மக்களிடையே தம்க்கிருந்த தளங்களை இழந்து தம்மை முற்றாக அந்நியப்படுத்திக்கொண்டன.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோற்றமும் வளர்ச்சியும்

1970களின் ஆரம்பத்தில் தமிழ் மாணவர் பேரவை தமிழ் இளைஞர் பேரவை போன்ற இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஆனால் சித்தாந்தத் தெளிவின்மை, வர்க்க உள்ளடக்கமின்மை, இளைஞர் குணாம்சம் போன்றவை காரணமாக இவ்வியக்கங்களால் மக்களினை ஒழுங்கு படுத்தி அணிதிரட்ட முடியவில்லை. இதன் காரணமாக தேசிய ஒடுக்கு முறைக்கான எதிர்ப்பு பெரும்பாலும் தனிப்பட்ட முறையிலும் துண்டாடப்பட்ட நிலையிலும், அதிதீவிர சாகச செயல்கள் உடையதாகவுமே காணப் பட்டது. வெகு விரைவில் இவ்வியக்கங்கள் உடையத் தொடங்கின.

இவ்வாறான பின்னடைவுகள் இருந்த போதும் முத லாளித்துவ சந்தர்ப்பவாத சீர்த்திருத்தத் தலைமையைக் கேள்விக் குள்ளாக்கியதன் மூலம் தமிழ் வாலிபர்கள் விடு தலைப் போராட்டத்தில் குணாம்ச ரீதியான மாறுதலைக் கொண்டு வந்தனர். காலப் போக்கில், முற்போக்குச் சிந்தனை இந்த வாலிபர்களிடையே வளரத் தொடங் கியது. ஆழமாகவும் பரவலாகவும் சென்ற தேசிய ஒடுக்கு முறையின் புறநிலைமைகள் முற்போக்குச் சிந்தனை மீதான ஈடுபாட்டை ஏற்படுத்தின.

1975இல் இலண்டனில் இருந்த ஈழத்தவர்கள் சிலரினால் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை அடிப் படைக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளுதல் என்னும் அடிப்படையில் **ஈழப்புரட்சி அமைப்பாளர்கள்** என்னும் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அமைப்பாளர்கள் ஈழவிடுதலைக்கான ஒரு புரட்சிகர அமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சில வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண்டனர்.

ஆரம்பத்தில் இவர்களுக்கு ஈழத்தில் இயங்கிக்கொண்டிருந்த எந்தவொரு அமைப்புடனும் தொடர்புகள் இருக்கவில்லை. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டனர். ஆனால் அது சிறிது காலத்திற்குள் முறிவடைந்தது. 1975இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் பலர் அவ்வியக்கம் செயலற்று போயிருந்தபோது உதிரிகளாக இருந்தனர். தமிழீழ விடுதலை புலிகளுடன் கொண்டிருந்த உறவு முடிவடைந்ததினால், ஈழப் புரட்சி அமைப்பாளர்கள் உதிரிகளாய் இருந்த தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு செயல்பட்டனர். இதன் அடிப்படையில் ஈழத்திலும் பரவலாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் குறுகிய காலத்திற்குள்ளேயே அதனுள் ஏற்பட்ட தத்துவம், நடைமுறை, அமைப்பு ஆகியவை பற்றிய கருத்து முரண்பாடுகளால் ஈழப்புரட்சி அமைப்பாளர்களுக்கிடையே 1980இன் பிற்பகுதியில் முரண்பாடு ஏற்பட்டது.

இதன் விளைவாக ஒரு பிரிவினர் ஜனநாயக மத்தியத்துவம், விமர்சனம், சுயவிமர்சனம் என்னும் நடைமுறைகளுடன் புரட்சிகர அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் தலைமையில் பரந்துபட்ட மக்களை ஒன்று படுத்தி அரசியல் ரீதியாக அணிதிரட்ட வேண்டும் என்னும் அடிப்படையில் வேலைத்திட்டமொன்றை முன்வைத்து **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** என்னும் அமைப்பாகச் செயற்பட ஆரம்பித்தனர்.

இதன் மறுபிரிவினர் தம்மை **ஈழப்புர்ட்சி அமைப்பு** என்று உருவமைத்துக்கொண்டனர்.

1977இல் ஈழப்புரட்சி அமைப்பாளர்கள [illegible] வாக்கப்பட்ட மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொது மன்றம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வழிகாட்டலின்கீழ் இயங்கத் தொடங்கியது.

1981ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது மாநாடு நடைபெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேலைத் திட்டத்தின்படி மக்களை அரசியல் மயப்படுத்தி அணித்திரட்ட வெகுஜன அமைப்புக்களைக் கட்டுதல் எனக் கடைப்பிடிக்கப்பட்ட திட்டம், நடைமுறையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தை அளித் துள்ளது.

கிராமிய தொழிலாளர் விவசாயிகள் முன்னணி, கடல் தொழிலாளர் முன்னணி, ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, ஈழ வாலிபர் முன்னணி, பெருந்தோட்டப் பாட்டாளிகள் முன்னணி போன்ற வெகுஜன அமைப்பு கள் உருவாக்கப்பட்டு இந்த வெகுஜன அரங்கங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் வேலைகள் மக்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணிக்கு மிடையில் பிணைப்புக்களை வ்லுப் படுத்தின. குறிப்பாக ஈழமாணவர் பொது மன்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் வேலைகள் மக்கள் மத்தியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின.

இவை ஒரு தொடர் வேலைத் திட்டமாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் மக்கள் சக்தியைத் திரட்டுவதிலும், மக்களிடமிருந்து புரட்சிகரப் போராளிகளை உருவாக்கு வதிலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி குறிப் பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கைத் தீவிலிருந்து வந்த முற்போக்கு இயக்கங்கள் சிதைவுண்டமை, தமிழர்

..தலை இயக்கங்கள் சின்னாபின்னாப்பட்டுப் போனமை, என்பவற்றைப் படிப்பினைகளாகக் கொண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயற்பட்டு வருகின்றது.

இவை மட்டுமல்லாமல் எமது நாட்டுத் தன்மை, ஈழ மக்களிடையே நிலவும் வேறுபாடுகள், முரண்பாடுகள், எமது பண்பாட்டுக் குணாம்சங்கள் என்பவையும், ஆழமாகக் கவனிக்கப்பட்டு **மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தின் அடிப்படையிலான ஒரு பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகக் கட்டி எழுப்பி அதன் தலைமைத்துவத்தை ஈழ விடுதலைப் போராட்டத்தில் நிலை நாட்டுவது** எனும் நோக்கத்தின் அடிப்படையிலேயே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அனைத்து வேலைத் திட்டங்களும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் திறன், மக்கள் சக்தி என்பவை கடந்த காலத்தில் பல் வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் போராட்டங்கள், பேரணிகள் மூலம் பரிசோதிக்கப்பட்டன.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது, தனது ஆயுதப் படையாக **மக்கள் விடுதலைப் படை**யைக் கட்டி எழுப்பியுள்ளது. அதன் ஆற்றல் பல தடவைகளில் உலகுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சர்வதேச ரீதியில் கொண்டிருக்கும் தனது அரசியல் நிலைப்பாட்டைத் தனது 'வெளியீடுகளினூடாக மட்டுமில்லாது, அது தொடர்பாகத் திட்டவட்டமாக மேற்கொள்ளப்பட்ட போராட்ட நடவடிக்கைகள் ஊடாகவும் சர்வதேச சக்திகளுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவுகளினூடாகவும் நிரூபித்துக் காட்டியிருக்கின்றது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சியமைப்பு ஆகியவற்றுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டிக் கொண்டு. மேலும் தமிழீழ விடுலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடு

தலைக் கழகம் ஆகியவற்றினையும் ஐக்கிய முன்ன யுடன் ஒன்றுபடும்படி அறைகூவல் விடுத்து வருகின்றது, அத்துடன் அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளில் தனியாகவும் கூட்டாகவும் ஈடுபட்டு வருகின்றது. இவற்றின் மூலம் மக்களின் புரட்சிகரமான விடுதலைப் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் ஈழ மக்களின் ஒற்றுமை என்றால் என்ன என்பதற்கு எடுத்துக்காட்டாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஏனைய சகோதர இயக்கங்களோடு இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேலும் மார்க்சிய-லெனினிச சித்தாந்தத்தினால் செழுமை யாக்கப்பட வேண்டியும், மக்கள் மத்தியில் மேலும் விரி வாகவும் பரவலாகவும், ஆழமாகவும் அமைப்புரீதியில் விரிவடையவும் வேண்டியுள்ளது.

# ஈழ தேச விடுதலை தவிர்க்க முடியாதது

இலங்கையில் உள்ள சிங்கள, தமிழ் உழைக்கும் வர்க்கத்தின் ஒருங்கிணைந்த இலங்கை முழுவதற்குமான மொத்த புரட்சி ஏற்படுவதற்கான யதார்த்த சூழ்நிலைகள் தற்போது நிலவவில்லை.

ஏனெனில் தேசிய முரண்பாடு பிரதான முரண்பாடாகக் கூர்மையாக வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழ் பேசும் மக்களுடைய பாரம்பரிய பிரதேசங்கள் சிறீலங்கா அரசினால் கைப்பற்றப்பட்ட பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஈழ தேசம் விடுதலை அடையாமல் இலங்கை தீவு முழுவதற்குமான பாட்டாளி வர்க்கப் புரட்சியைச் சாத்தியமாக்க முடியாது.

மேலும் **ஈழ தேசமென்பது முழுமையாக வளர்ச்சியடைவதற்கும், ஈழ மக்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார விடுதலையை உண்மையாக்குவதற்கும் தேசிய ஜனநாயகப் புரட்சி நிறைவேற்றப்படுவதுடன் அது சோசலிசப் புரட்சியாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.**

## முன்னணி சக்தி

ஈழ மக்களிடையே உள்ள அனைத்து வர்க்கங்களும் ஈழப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கக் கூடிய முன்னணி சக்தியாகிவிட முடியாது.

தற்போதைய நவகாலனித்துவ காலகட்டத்தில் தேசிய முதலாளித்துவ தலைமைகள் நீண்ட காலத்தில் தேசத்தின் பொருளாதார விடுதலையை வென்றெடுக்க முடியாதவர்களாகப் போய்விடுகின்றமையால் படிப்படியாக அவர்கள் ஏகாதிபத்தியத்தின் கரங்களுக்குள் வீழ்ந்து அரசியல் விடுதலையைக் கூட இழந்துவிடுகின்றனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இன்று பெருமளவு ஈடுபட்டிருக்கும் குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட வர்க்கங்கள் உண்மையில் இப் போராட்டத்தினை தலைமை தாங்கி நடத்த முடியாதனவாக உள்ளன. ஏனெனில் குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட வர்க்கங்களுக்கு ஒரு திட்டவட்டமான வர்க்க நிலைப்பாடு கிடையாது. அவை முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கும் போது அதனைச் சார்ந்தும், பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் போது இதனைச் சார்ந்தும் நிற்கின்ற ஊசலாடும் தன்மை கொண்டவையாகும். மேலும் இவ்வர்க்கங்கள் தனிநபர் பயங்கரவாதம், சாகச செயல்களின் அதீத நம்பிக்கை, தனி மனித பயங்கரவாதம் போன்ற தவறுகளுக்கு ஆட்படுகின்ற ஆபத்தும் உண்டு. ஆகவே இவர்கள் ஈழ தேச விடுதலைப் போராட்டத்தின் ஊக்க சக்தியாகக் கருதப்படுகின்ற போதிலும் தலைமை தாங்கக் கூடிய முன்னணி சக்தியாக இருக்க முடியாது.

இது காலவரை ஈழ விடுதலைப் போராட்டத்தில் குட்டி முதலாளித்துவ சிந்தனை கொண்ட வாலிப சக்தி திட்டவட்டமான வர்க்கநிலைப்பாடு இல்லாது இப் போராட்டத்தில் ஊக்க சக்தியாகப் பங்காற்றி வந்துள்ளது. பாட்டாளி வர்க்கத் தலைமையை ஏற்பதன் மூலமே இக் குட்டி முதலாளித்துவ சக்திகள் தொடர்ந்தும் முற்போக்குபாத்திரத்தை வகிக்க முடியும்.

இன்றைய காலகட்டத்தில் தேசிய விடுதலையை உறுதியாகத் தொடர்ந்து போராடி வென்றெடுக்கக் கூடியது பாட்டாளி வர்க்கமாகவே உள்ளது. எனவே ஈழ விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற முன்னணிப்படை ஈழத்தில் உழைக்கும் மக்கள் மத்தியில் இருந்து எழுச்சி பெறுகின்ற பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகவே இருக்க வேண்டும்.

பல்வேறு நலன்களை உடைய வர்க்கங்கள், சமூக பிரிவுகள் தேசிய ஒடுக்குமுறையை எதிர் நோக்குவதால் அதற்கு எதிராகப் போராடுகிறார்கள். இவ்வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் அனைத்தினையும் பாட்டாளி வர்க்க ஸ்தாபனம் தனது தலைமையில் அணி திரட்ட வேண்டும். இதன் மூலமே ஈழ விடுதலைப் போராட்டத்தின் அனைத்து குறிக்கோள்களையும் நிறைவேற்ற முடியும்.

# ஆயுதப் போராட்டம்

எதிரியைத் தோற்கடித்து ஈழ மக்களின் புரட்சிகர விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதப்போராட்டமே பிரதான போராட்ட வடிவமாக உள்ளதென்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அனுபவ ரீதியாகக் கண்டறிந்துள்ளது. ஆயுதப் போராட்டத்தை வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையாகவோ தனி நபர்களின் வீர சாகச செயல்களாகவோ நாம் கருதாது எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் யுத்தமாக முன்னெடுக்க முடிவு செய்கிறோம்.

மக்கள் யுத்தப் பாதை என்பதனை உண்மையாக்கும் வகையில்

அ) மக்களை ஆயுதப் போராட்டத்திற்குரிய வகையில் அரசியல் மயப்படுத்தி அதற்கான அமைப்புகளைக் கட்டி எழுப்புதல்.

ஆ) தற்பாதுகாப்பு எதிர்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் பரந்துபட்ட மக்களை இராணுவ மயப்படுத்துதல்.

இ) புரட்சியின் இலாபங்களைத் தொடர்ந்து பாதுகாக்கும் பொருட்டு மக்கள் விடுதலைப் படையைப் பலப்படுத்துதல்.

இப்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையானது ஏனைய வெகுஜன அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

## 1. நீண்ட கால அரசியல் குறிக்கோள்கள்

1.1 ஈழ மக்களின் தேசமாகிய ஈழத்தை சிறீலங்கா ஆட்சியாளரின் பிடியில் இருந்து விடுவித்து ''ஈழ மக்கள் தேசிய ஜனநாயகக் குடியரசை'' நிறுவுதல்.

1.2 ஈழத்தின் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு, சமூக, கலாச்சார விவகாரங்களில் முழுமையாக சுதந்திரத்தை உண்மையானதாக்கும் வகையில் தேசிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுதல்.

1.3 பாட்டாளி வர்க்க சர்வாதிகார அர்சை நிறுவி அதன் தலைமையில் பொது உடைமை சமூக அமைப்பை அடைவதை இறுதிக் குறிக்கோளாகக் கொண்ட சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுதல்.

## 2. தேசிய ஜனநாயகப் புரட்சியின் உடனடிப் பணிகள்

தேசிய் ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பணிகள்.

2.1 ஈழத்தின் உழைக்கும் மக்களின்-குறிப்பாக கிராமிய உழைப்பாளர், பெருந்தோட்டப் பாட்டாளிகள், அலுவலக ஊழியர்கள் ஆகியோரைத் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும், வர்க்க சுரண்டலுக்கு எதிராகவும் அணி திரட்டி அவர்களின் அரசியல் உணர்வின் தரத்தை உயர்த்துதல்.

2.2 தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் உருவாகும் புதிய சோசலிச சமுதாயத்திற்கும் ஏற்ற வகையில் மக்களுடைய சமூக கலாச்சார உணர்வுகளை உருவாக்குதல்.

2.3 சாதி ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம், பிரதேசவாதம் என்பவற்றிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தல்.

2.4 மூட நம்பிக்கை, சமூக விரோத செயல்கள், பிற்போக்கு கலாச்சார அம்சங்கள் ஆகியவற்றை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 3. ஈழ மக்களின் தேசிய ஜனநாயகப் புரட்சியின் அரசியல் சமூக பொருளாதாரக் கொள்கைகள்

ஈழ மக்கள் ஒவ்வொருவரதும் உண்மையான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார சுதந்திரத்தை முழுமைப்படுத்தும் வகையில்,

3.1 தேச எல்லை தொட்டு நகர-கிராம அலகுகளின் எல்லை வரை உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டுதல்.

3.2 சுய சார்புடைய தன்னிறைவுடைய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதல்.

3.3 அரசியல் பொருளாதார சமூக கலாச்சார மற்றும் விடயங்களில் ஈழ மக்களை ஒருங்கிணைந்த முழுமையான ஒரு தேசமாகக் கட்டி எழுப்புதல்.

3,4 இயற்கைக்கும், மனிதனுக்கும், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்குமிடையில் சம நிலையைப் பராமரித்தல்.

3.5 நவீன மயப்படுத்தலில் சமகால சர்வதேச நிலைக்குச் சமனாக இருப்பதற்கான நிலைமைகளை உருவாக்குதல்.

3.6 சோசலிச சமூக அமைப்பிற்கான முன் தேவைகளை உருவாக்குதல்.

3.7 பரஸ்பர நலன்களைப் பேணும் வகையில் ஏனைய தேசங்களோடு உறவைப் பேணல்.

## 4. ஈழ மக்களுடைய தேசிய ஜனநாயகப் புரட்சியின் அரசியல், சமூக, பொருளாதாரப் பணிகள்

### 4.1 அரசியற் பணிகள்

4.11 தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் முற்போக்கு புத்திஜீவிகளைக் கொண்ட மக்கள் குழுக்களை நிறுவி நீதி, நிதி, நிர்வாக, சமூக, பொருளாதார

திட்டமிடல், அமலாக்கல் விடயங்களை அந்தந்த மட்டங்களில் செயற்படுத்துகின்ற நிறுவனங்களை அமைத்தல்.

4.12 நகர-கிராம மக்கள் குழுக்களை ஒருங்கிணைத்த வகையில் 'பிரதேச அரசியல் சபை'களை நிறுவி, அவ்வப் பிரதேசங்களுக்குரிய நீதி, நிதி, நிர்வாக, சமூக, பொருளாதார, திட்டங்களை அமலாக்கும் விடயங்களைப் பிரதேச மட்டத்தில் செயற்படுத்து கின்ற நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.

4.13 மலையகத் தமிழ் மக்களின் வாழும் நிலப்பரப்பை வரையறுத்து அதில் அவர்களின் அதிகாரம் செயற்படுகின்ற வகையில் பிரதேச சுயாட்சி அமைப்பை உருவாக்குதல்.

4.14 முஸ்லீம் மக்களின் வாழும் நிலப்பரப்பை வரை யறுத்து அவர்களின் பிரதேச தனித்துவத்தையும், இஸ்லாமிய சமய வாழ்க்கையையும், முஸ்லீம் சமூக வாழ்க்கையையும் உத்தரவாதம் செய்யும் வகை யான சட்ட நிர்வாக அமைப்பு ஒழுங்குகளினை கொண்டு, ஈழ முஸ்லீம் மக்களின் பிரதிநிதித் துவத்தைக் கொண்ட ஒரு 'பொதுமைப்பட்ட பிரதேச சுயாட்சி நிர்வாக அமைப்பு' ஒன்றினை உருவாக்குதல்.

4.15 ஈழப் பிரதேசம் முழுவதையும் இணைத்த வகை யான நீதி, நிதி, நிர்வாகம், சமூக பொருளாதார திட்டமிடல், அமலாக்கல், பாதுகாப்பு, வெளி விவ காரம் ஆகிய விடயங்களில் தேசிய ரீதியில் சட்டங் கள் ஆக்கவும் திட்டமிடவும் செயற்படுத்தவு மான அனைத்து அதிகாரங்களினையும் கொண்ட அதி உயர் அமைப்பான ''மக்கள் பேரவையை'' உருவாக்குதல்.

**4.2 சமூக, பொருளாதாரப் பணிகள்**

4.21 உணவு, உடை, வீடு ஆகிய அடிப்படைத் தேவை களை அனைத்து மக்களுக்கும் உத்தரவாதம் செய்தல்.

4.22 நிலமற்ற அனைத்து மககளையும் நில[illegible] களாக்குதல். அத்துடன் அவர்களின் விருப்பத் துடன் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்குதல்.

4.23 பழமைவாத சமூக, கலாச்சார அம்சங்களை முற்றாக அழித்தொழிப்பதற்கான அடிப்படை நட வடிக்கை அனைத்தினையும் மேற்கொள்ளுதல்.

4.24 தற்போது சிறீலங்காவின் அரசுடைமையாக இருக் கும் ஈழத்தைச் சேர்ந்த மலையகப் பெருந்தோட்ட நிலங்களையும் தொழிற்சாலைகளையும் ஈழத்தின் அரசுடைமையாக்கி, தோட்டத் தொழிலாளர் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வருதல்.

**4.25 முதலீடு-தொழில் துறை**

அ) ஈழத்தின் சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் நோக்கத்தோடு தேச மக்களின் பிர தான தேவைகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற் கொள்ளும் தொழிற் சாலைகளை நிறுவுதல்.

ஆ) பயன்படாதிருக்கும் இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தும் பொருட்டு புதிய தொர்ழில்துறைகளை உருவாக்குதல்.

இ) தேசிய பொருளாதார வளர்ச்சிக்கேற்ற வகை யில் நிலவுகின்ற தனியார் உடைமை உற்பத்தி அமைப்புக்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல்.

ஈ) ஈழத்திற்கு வெளியே உள்ள ஈழத்தவர்கள் தமது சேமிப்புக்களையும், மூலதனத்தையும் ஈழத்தில் உற்பத்தி சார்ந்த துறைகளில் முதலீடு செய் வதற்கு ஊக்குவித்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.

உ. தொடர்பு விருத்தி

அ) கிராமங்கள் அனைத்தினையும் நவீன மயப் படுத்தி தொடர்புகள் அனைத்தினையும் ஒழுங் கமைத்தல்.

ஆ) ஈழத்தின் அனைத்துப் பகுதிகளையும் மின்சாரம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள், உற்பத்தி, விநியோகம் போன்றவற்றால் நன்கு ஒழுங்கமைத்தல்.

4.27 உற்பத்திக்கு ஊக்கம்

அ) விவசாயத்துக்கான அடிப்படை உள்ளீட்டுத் தேவைகளின் தட்டுப்பாட்டை நீக்கல்.

ஆ) தேசிய உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்து லுக்குள்ள அத்தனை தடைகளையும் நீக்குதல்.

இ) மக்களின் அடிப்படை தேவைகளின் உற்பத்தி களின் உற்பத்தி செலவினைச் சரியான முறை யில் முழுமையாகக் கணிப்பிட்டு அவ்வுற்பத்தி களுக்கான உத்தரவாத விலைகளை வழங்கு வதோடு, களஞ்சியப்படுத்தல, சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

4.28 கல்வி

அ) சகல மட்டங்களிலும் இலவசக் கல்வி முறையை அமல்படுத்தல்.

ஆ) உற்பத்தி சக்திகளின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சிக்கும் அதற்குரிய வகையில் அமையும் உற்பத்தி உறவுகளின் மாற்றத்திற்கும் ஏற்ற வகையான விஞ்ஞான பூர்வமான கல்வி முறையை உருவாக்குதல்.

இ) விஞ்ஞான-தொழில் நுட்ப அறிவு ஆராய்ச்சி வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் அனைத்தினையும் மேற் கொள்ளல்.

ஈ) எழுத்தறிவற்ற அனைவருககும பால, வயது வேறுபாடின்றி அடிப்படைக் கல்வி அறிவு பெறுதலை கட்டாயமாக்கி அதற்குரியதான அனைத்து ஒழுங்கினையும் மேற்கொள்ளல்.

உ) கல்வி, வாய்ப்பு வசதியில் கிராம நகர பிரதேச வேறுபாட்டை ஒழித்தல்.

ஊ) ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையிலான கட்டாய இலவச கல்வியை நடைமுறைப் படுத்தல், அத்துடன் அறிவு ஆராய்ச்சி தேட்டத்தில் நாட்டமும் ஊக்கமும் உடையவர்கள் அனைவருக்கும் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**4.29 வேலை வாய்ப்பு**

அ) சகலருக்கும் வேலை வாய்ப்பினையும் அடிப் படை வருமானத்தையும் உத்தரவாதம் செய்தல்.

ஆ) கல்வி அறிவிற்கும் தொழிலுக்குமிடையான ஒருங்கிணைப்பை நன்கு ஏற்படுத்தல்.

இ) தொழிலாளர்களின் தொழில் உத்தரவாதத்திற் கும் சமூக பாதுகாப்பிற்கும் ஏற்பாடுகளைச் செய்தல்.

ஈ) ஒருவரின் குடியிருப்பு இடத்திற்கும் தொழில் செய்யும் இடத்திற்கும் இடையிலான இடை வெளியைச் சீர்படுத்தல்.

உ) சமூக விரோதமான, சமூக ஒழுக்கக் கேடான தொழில்களை ஒழித்துக் கட்டுவதற்கான அடிப் படை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**4.210 சர்வதேச பொருளாதார உறவு**

அ) ஈழத்தில் உள்ள அந்நிய மூலதனம் அனைத்தும் தேசிய உடைமை ஆக்கப்பட்டு நாட்டிலுள்ள அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படுதல்.

ஆ) ஏனைய நாடுகளுடனான வர்த்தக உறவுகளை மேற்கொள்ளும் போது பொருளாதார சுய சார்பு நிலையைப் பாதிக்காத வகையில் மேற் கொள்ளல்.

இ) இயன்ற அளவுக்கு வர்த்தக உறவுகளை சோசலிச நாடுகளுடனும் வளர்முக நாடுகளுட னும் மேற் கொள்ளல்.

**4.211 பொருளாதார நிதித் திட்டமிடல்**

அ) தேசிய நிதியிலான மொத்த பொருளாதாரத் திட்டமிடுகையை ஒரு மத்திய பொருளாதாரத் திட்டமிடல் அமைப்பினால் மேற் கொள்ளுதல், பிரதேச அரசியல் சபைகள் நகர கிராம மக்கள் கமிட்டிகளிடமிருந்து பெறப்படும் ஆலோசனை களின் அடிப்படையில் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.

ஆ) வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் அனைத்தும் அரசுடைமையாகவே செயல்படும். பண வெளி யீடு, பணக்கட்டுப்பாடு அனைத்தும் அரசிடம் மத்தியப் படுத்தப்பட்டிருக்கும்.

**4.212 ஆண் பெண் சமத்துவம்**

அ) கல்வி வேலை வாய்ப்பு மற்றும் சகல விடயங் களிலும் ஆண் பெண் வேறுபாடு பராமரிக்கப் படக் கூடாது என்பதை கட்டாயமாக்குதல்.

ஆ) கணவன் மனைவியைத் துன்புறுத்தல் என்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்குதல்.

இ) திருமணம் செய்து கொண்ட ஆணோ பெண்ணோ விவகாரத்து செய்யும் உரிமை உடையவர்கள். அதே வேளை அவர்களின் குடும்பச் சொத்து மீதான பொறுப்புக்களும் உரிமைகளும் இருவருக்கும் உண்டு. இந்த விடயங்கள் மீது சிக்கல் ஏற்படும் வேளைகளில் பெண், ஆண் சமத்துவம் பராமரிக்கப்படும் வகையில் நீதி கிடைக்க ஒழுங்கு செய்தல்.

ஈ) கணவனில் மனைவி தங்கியிருப்பதை மாற்றி பெண்களின் சுய சார்பு நிலையை ஏற்படுத்தல்.

உ) பிள்ளைகள் இருப்பதால் கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் வேலை செய்வது சிரமம் எனும் நிலைமைகளை மாற்றியமைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல்.

**4.213 இயலாதோர்**

அ) அங்கயீனமானவர்களுக்கு அவர்களின் இயங்கும் அங்கங்களினால் வேலை செய்து வாழக் கூடிய வேலைவாய்ப்புக்களுக்கான ஒழுங்குகளைச் செய்தல்.

ஆ) மூளை வளர்ச்சியற்றோர், மூளை பிசகியோர் மற்றும் எதற்கும் இயலாத நோயாளிகள், வயோதிகர் போன்றோருக்கு அவரவருக்குத் தேவையான சுகாதார வசதி கொண்ட பராமரிப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

**4.214 கலை கலாச்சாரம்**

அ) அனைத்து மக்களுக்கும் அவரவரது சமய நம்பிக்கைகளையும் கலாச்சார வழக்கங்களையும் கடைப்பிடிப்பதற்கான உத்தரவாதம் செய்தல்.

ஆ) சமூக வளர்ச்சிக்கேற்ற வகையில் முற்போக்கான பாரம்பரிய கலை இலக்கிய வடிவங்களை வளர்த்தெடுப்பதோடு, புதிய கலை இலக்கிய வடிவங்களினதும் உள்ளடக்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்.

இ) மக்களுக்குப் புதிய வாழ்வில் தெம்பைக் கொடுக்கக்கூடிய கலை இலக்கிய வளர்ச்சிக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

ஈ) அனைத்து மக்களும் உரிய நாளாந்த கலை இலக்கிய ஈடுபாட்டிற்கான வாய்ப்புகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல்.

உ) பிற்போக்குத் தனமான சீரழிந்த கலை இலக்கியப் படைப்புகளை ஒழித்துக் கட்டுதல்.

ஊ) கலைஞர்களுக்கு ஊக்கமும் சமூக உத்தரவாத மும் அளித்தல்.

**4.215 இயற்கைப் பாதுகாப்பு**

அ) சூழல் பாதுகாப்பு பராமரிப்பு ஏற்பாடுகளைச் செய்தல்.

ஆ) தேச முழுவதிலுமுள்ள கடல்நீர் ஏரிகள், ஏரிகள், குடாக்கள், குளங்கள், ஆறுகள் போன்ற வற்றைப் பொருளாதார வளர்ச்சி குறித்தும் இயற்கை வனப்பு குறித்தும் சீர்படுத்தல்.

இ) கடல் அரிப்பைத் தடுத்தல், நன்னீர் வளங் களைப் பராமரித்தல்.

ஈ) பொருளாதார மற்றும் திட்டமிடல்களின் போது இயற்கைப் பாதுகாப்புக்கு முதன்மை கொடுத் தல்.

# சர்வதேச நிலைப்பாடு

எமது தேசிய விடுதலைப் போராட்டம் உலகின் சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காக நடைபெறுகின்ற போராட்டங்களின் ஒரு பகுதியாகும். இன்று உலக சோசலிச அமைப்புக்கும், முதலாளித்துவ அமைப்புக்கு மிடையே போராட்டம் நடைபெற்று வருகின்றது.

புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளை தொடர்ந்தும் தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கு ஏகாதி பத்தியம் முயற்சித்து வருகிறது. புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகள் தமது சுதந்திரத்தைப் பேணுவதற்கும், தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும், தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், சோசலிச நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே தேசிய விடுதலைப் போராட்டம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் என்பவற்றிற்கெதிரான போராட்டமாகும். மாறிவரும் இன்றைய காலகட்டத்தில் சோசலிச நாடுகளுக்கும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கும் இடையே உள்ள உறவு பிரிக்கப்பட முடியாததாகும்.

காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாடுகளை நவ காலனித்துவ உறவுகளின் மூலம் ஏகாதிபத்தியம் தொடர்ந்தும் தனது பிடிக்குள் வைத்திருக்கின்றது. இந்த நாடுகளை உலக முதலாளித்துவ அமைப்பு உலக சோசலிச அமைப்புக்கு எதிராகத் தனது போராட்டத்தின் உலகளாவிய அரசியல் பொருளாதார இராணுவ நலனுக் காகப் பயன்படுத்த முயற்சி செய்து வருகின்றது.

...வ முகாமுடன் இருந்து தம்மை விடுவித்து சோசலிச முகாமுடன் இணைத்து கொள்வதன் மூலமே இந்த நாடுகள் உண்மையான அரசியல் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்ய முடியும். அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனால் தலைமை தாங்கப்படும் சர்வதேசப் பிற்போக்குச் சக்திகளும் இந்திய உபகண்டத்தில் தமது உலகளாவிய நலன்களைப் பேணுவதற்கான கருவியாகச் சிறீலங்காவின் பிற்போக்கு ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்தி வருகின்றன.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஊடாக சிறீலங்கா ஆட்சி அதிகாரத்தைப் பலவீனப்படுத்துதல் மூலம் இந்திய உபகண்டத்தில் ஏகாதிபத்திய சதியை முறியடிப்பதோடு சிறீலங்காவின் பாட்டாளி வர்க்க புரட்சி ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளையும் உருவாக்க முடியும்.

## இவற்றின் அடிப்படையிலான எமது சர்வதேசியக் கடமைகள்

**சிறீலங்காவைப் பொறுத்தவரையில்,**

1. ஈழ விடுதலையை ஆதரிக்கும் சிங்கள முற்போக்குச்சக்திகளுடன் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
2. ஈழ விடுதலைப் போராட்டத்தினைப் பற்றிச் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதுடன் இவ்வேலையினைச் செய்யும் முற்போக்கு அமைப்புகளுக்குச் செயலூக்கமான ஆதரவு அளித்தல்.
3. சிறீலங்கா நவபாசிச முதலாளித்துவ அரசுக்கு எதிராகவும் அதற்கு உறுதுணையாக நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் போராடும் சகல சிங்கள முற்போக்குச் சக்திகளுக்கும் ஆதரவு அளித்தல்.
4. ஜனநாயகஉரிமைகளுக்காகச்சிறீலங்கா மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தல்.

**ஏனைய தேசங்களைப் பொறுத்தவரையில்**

1. உலகெங்கும் உள்ள தேசிய விடுதலை இயக்கங்களோடு இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளல்.
2. உலகெங்கும் உள்ள பாட்டாளி வர்க்க கட்சிகளோடும் முற்போக்கு ஜனநாயக சக்திகளோடும் நட்புறவுகளை வளர்த்துக்கொள்ளல்.
3. சோசலிச நாடுகளுக்கு உற்றதுணையாக நின்று அவற்றோடு நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ளல்.
4. அணி சேரா இயக்கத்தின் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்தல்.
5. இந்து சமுத்திர பிராந்தியத்தைச் சமாதான மண்டலமாக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக நிற்றல்.
6. நிறவெறி, இனவெறி, மதவெறி, சியோனிசம், பாசிசம் ஆகியவற்றிற்கெதிராகப் போராடுதல்.
7. சோசலிச நாடுகளுக்கெதிரான யுத்த அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும் ஏகாபத்தியத்தின் போர் வெறிக் கொள்கைகளுக்கெதிராகவும் போராடும் சக்திகளுடன் இணைந்து செயல்படல்.
8. உலக சமாதான இயக்கத்திற்கு ஆதரவளித்தல்